# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றம்
## (கூட்டிணைத்தல்)

**வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*களுத்துறை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன அவர்களால் 2023, செத்தெம்பர் மாதம் 05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது*

*(2023, ஓகத்து மாதம் 22 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **201 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 18.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றம்
## (கூட்டிணைத்தல்)

### வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை*

"வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றம்" என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்தோடு சொல்லப்பட்ட குறிக்கோள்களையும், கருமங்களையும் பயனுறக் கொண்டுநடாத்தும் நோக்கத்துடன் இதற்கு முன்னர் ஸ்ரீ மகா விகாரை, ஸ்ரீ மகா விகாரை றோட், பாமன்கடை, தெஹிவளையில் தாபிக்கப்பட்டிருந்ததாதலாலும்:

அத்துடன் சொல்லப்பட்ட மன்றமானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும், கருமங்களுக்காகவும் தாபிக்கப்பட்டதோ அந்தப் பல்வேறு குறிக்கோள்களையும், கருமங்களையும் இதுவரை சொல்லப்பட்ட மன்றத்தினால் வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின்     ஆம் இலக்க, வல்பொல பியனந்த கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றத்தைக் கூட்டிணைத்தல்*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் தற்போது குறித்த வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றம் (இதனகத்துப் பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய அவ்வெண்ணிக்கையினரான உறுப்பினர்களும், இதனகத்துப் பின்னர் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அதன் கீழ் ஆக்கப்படக்கூடிய விதிகளுக்கும் அமைய உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் அத்தனை ஆட்களும், "வல்பொல பியனந்த கல்வி கலாசார மன்றம்" என்னும் பெயர்மகுடத்தின்கீழ் இடையறாவழியுரிமை கொண்ட (இதனகத்துப்பின்னர்

“கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) கூட்டிணைக்கப்பட்ட குழுவாதலும் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம் என்பதுடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் அதன்விருப்பப்படி அதனை மாற்றவும் முழுத் தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக்குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) சங்க சபை உறுப்பினர்கள் பௌத்த சாசன வேலைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சுற்றுலா செல்லும் முன் அவர்கள் மிக ஆயத்தம் செய்வதற்காக கலாசார பிணக்குகள் ஏற்படாத வண்ணமும் பிற நாடுகளின் கல்வி கலாசாரங்களைக் கற்றுக் கொடுத்தல்;

(ஆ) பிறநாடுகளின் கலாசாரம், பழக்க வழக்கங்கள மற்றும் மொழிகளை கற்பித்து அதன் மூலம் சங்க சபை தேரர்களுக்கு உதவுதல்;

(இ) புலமைப் பரிசில்கள், பரிசளிப்புகள் வழங்குவதற்கான தாபனம் ஒன்றை நிறுவி தேவையான இலங்கை மாணவர்களுக்கு வழங்குவதோடு அவர்களின் ஆன்மீக, தத்துவ, கலாசார, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கல்விகளுக்கு உதவுதல்;

(ஈ) இலங்கையர்கள் மற்றும் அமெரிக்கர்களின் பரஸ்பர கலாசாரங்கள், மொழிகள் மற்றும் வேறு பாசைகள் பேச உதவுதல், கல்விச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்தல், அச்சுற்றுலாக்களின்போது தங்குவதற்கு விடுதி வசதிகள் ஏற்பாடு செய்தல், கல்வி மற்றும் கலாசார பிரதிநிதிகளை இடமாற்றிக் கொள்ளல்;

(உ) நூல் நிலையங்களை நடாத்துதல், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றவும், மேம்படுத்தவும் அவசியமான புத்தகங்கள், செய்தித்தாள்கள், வார சஞ்சிகைகள், வேறு வெளியீடுகள் போன்றவற்றை விலைக்கு வாங்குதலும், அதற்கு உதவுதலும்;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு இயைபான உள்நாட்டில் மற்றும் வெளிநாட்டில் இயங்கிவருகின்ற சங்கங்கள், தாபனங்களுடன் இணைந்து செயற்படலும்; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு இயைபான சங்கங்களுடன் ஒன்றிணைந்து அவைகளின் உதவியுடனும் அவசியமானோருக்கு மூக்குக் கண்ணாடிகளை வழங்க உதவுதலும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்*

**4.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் அப்போதைக்கு வலுவிலுள்ள கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைய பணிப்பாளர் நாயகம், கௌரவ செயலாளர், கௌரவ பொருளாளர் ஆகியோரையும் அவ்விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியவாறும் அதற்கிணங்கவும் தெரிவுசெய்யப்பட்ட வேறு பதினொரு பேருக்குக் குறையாத எண்ணிக்கையானோரையும் கொண்ட முகாமைக் குழுவொன்றின் மூலம் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) மன்றத்தின் ஆரம்ப உறுப்பினரான கௌரவ வண. வல்பொல பியனந்த தேரர் பணிப்பாளர் சபையின் ஆயுட்காலப் பணிப்பாளர் நாயகம் ஆவார். பணிப்பாளர் நாயகம் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்று அதிகாரி ஆவார்.

(3) இக்கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்தவர்களும்; சபையின் முகாமைக் குழுவின் உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள*

**5.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும் நடாத்தவும் முடிவுறுத்தவும் பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பின்றி பணம் கடன் வாங்கவும் அல்லது பணத்தைத் திரட்டவும் மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறவும் அல்லது சேகரிக்க

வும் அதன் நிதிகளை முதலீடு செய்யவும் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்துதல், வேலை நீக்கஞ்செய்தல் ஆகியவற்றுக்கான தத்துவங்களுட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றை சீர்படுத்துவதற்கு அல்லது மேம்படுத்துவதற்குத் தேவையான அல்லது தகுந்த எந்த வகையிலேனும் எல்லாக் காரியங்களையும் செய்வதற்கும் நிறைவேற்றுவதற்கும் அத்துடன் செயற்படுத்துவதற்குமான தத்துவமும் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்

**6.** (1) ஏதேனும் பொதுக் கூட்டத்தில், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றிலிரண்டு பங்கினருக்குக் குறையாதோரின் வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுள் எல்லாவற்றுக்குமாக அல்லது அவற்றுக்காகவும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகைப்படுத்தலும், உறுப்பினர்களை அனுமதித்தலும், உறுப்பாண்மைக் கட்டணம விலக்குதலும் அல்லது அவர்கள் பதவியை விட்டு விலக்குதலும் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தினதும், பணிப்பாளர் சபையினதும் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும் அவற்றில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள், அவர்களது தத்துவங்களையும், கடமைகளையும் பிரயோகித்தலும், புரிதலும்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்பவரின் நியமனங்களும், தத்துவங்களும், கடமைகளும் மற்றும் பணிகளும்;

(ஈ) பணிப்பாளர்கள் சபையினதும், கூட்டுத்தாபனத்தினதும் உறுப்பினராக வருவதற்கான தகைமைகள்; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமை செய்தலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதிகள் இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதைப் போன்று அதே போன்ற கூட்டத்திலும் அதே முறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், ஒழிக்கப்படலாம் அல்லது அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் ஒவ்வொருவரும் தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**7.** இச்சட்டம் அமுலுக்கு வரத் தொடங்கிய தேதிக்கு நேர்முந்திய திகதியன்று மன்றத்தில் நிலவிய சகல கடன்களும், பொறுப்புக்களும் இத்தால் கூட்டிணைக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தால் செலுத்தித் தீர்க்கப்படல் வேண்டுமென்பதோடு, அத்தினத்தன்று மன்றத்துக்கு செலுத்தப்படவேண்டிய அனைத்து கடன்கள், அங்கத்துவப் பணம், சந்தாப்பணம் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்பட வேண்டிய மற்றும் அதற்கு வருமதியாக வுள்ள கடன்கள்*

**8.** (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதோடு, இதற்கு முன்னரோ அல்லது இதன் பின்னரோ வெகுமதிகள், ஆணைகள், நன்கொடைகள், அங்கத்துவப் பணம், சந்தாப் பணம், கட்டணங்கள் அல்லது அளிப்புக்களாக ஏற்பகப்படுகின்ற சகல பணத்தொகைகளும் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான வங்கியில் அல்லது வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் கணக்கொன்றில் வரவு வைக்கும் பொருட்டு வைப்புச் செய்யப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்*

(2) இச்சட்டத்தின்கீழான கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் அதன் தத்துவங்களை அமுலாக்குகையிலும் ஈடேற்றுகையிலும் பாவனையின்போதம் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்டுள்ள எந்தவொரு செலவினமும் செலுத்தித் தீர்க்க அவசியமான அனைத்துப் பணமும் நிதியத்தில் இருந்து செலுத்தப்படல் வேண்டும்.

**9.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, அளிப்பு, நன்கொடை, குத்தகை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, ஏதும் உடன்படிக்கையின்கீழ் அல்லது வேறுவகையாகக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும், இச்சட்டத்தின்

*கூட்டுத்தாபனம் அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாமென்பது*

ஏற்பாடுகளுக்கமைய இயலுமானதாதலாலும், ஆற்றலுடையதாதலும் வேண்டும். அத்துடன் அத்தகைய எல்லா ஆதனங்களும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாளவுள்ள முழுத்தத்துவத்தைக் கூட்டுத்தாபனம் கொண்டிருத்தலும் வேண்டும்.

உறுப்பினர்களின் பொறுப்பை வரையறுத்தல்

**10.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரெவரும் கூட்டுத்தாபனத்தின் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத்தீர்க்கும் நோக்கத்துக்காக அவரிடமிருந்து கூட்டுத்தாபனத்துக்கு வருமதியாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய உறுப்பினரிடமிருந்து செலுத்தப்படவேண்டிய தொகையை விஞ்சுகின்றதான ஏதேனும் உதவுதொகையைச் செலுத்துவதற்கு ஆளாதலாகாது.

கலைக்கப்பட்டதன் மீது எஞ்சியிருக்கின்ற ஆதனம்

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்தபின்னர் எத்தகையதுமான ஆதனம் எதுவும் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபன உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப் படலாகாது : ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை உடையதும் அவற்றின் விதிகளின்படி அவற்றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டதுமான வேறு நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது கலைக்கப்படும் பட்சத்தில் அல்லது அதற்கு முன்னர் கூட்டுத்தாபன உறுப்பினர்களால் தீர்மானிக்கப் படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்

**12.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளினது நியதிகளின்படி, கூட்டிணைக்கப்பட்ட குழுவின் கணக்குகள், கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் அல்லது கணக்காய்வளர்

தலைமையதிபதியினால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்றவொரு கணக்காய்வாளரினால் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, ''தகைமை பெற்ற கணக்காய்வாளர்'' என்பது -

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராக இருந்து, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) எக்கணக்காளர் குழுமமொன்றின் வதிவுள்ள பங்காளர்களுள் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினரொருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக இருந்து, அத்தகைய நிறுவகத்தினால் கணக்காளரொருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுமுள்ளாரோ அக்கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

**13.** கூட்டுத்தாபனத்தின் இலட்சினையானது தவிசாளர் அத்துடன் பணிப்பாளர்கள் சபையின் அலுவலரொருவர் முன்னிலையிலன்றி எத்தன்மையினதுமான சாசனமெதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் பெயர்களை எழுதி ஒப்பமிடுதல் வேண்டு மென்பதுடன், அத்தகைய ஒப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சி ஒருவராக ஒப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணுதல்

**14**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும், குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டிணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**15**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.